# செய்தி வெளியீடு

பாஜகவின் மூத்த தலைவரான பல்பீர் பூஞ்ச், இந்திய ரயில்வேயின் உயர்மட்ட மேலாண்மை மற்றும் நிதி அமைப்பை இரண்டாகப் பிரித்து நிர்வாகம் செய்வதற்கு கோரிக்கை விடுத்துள்ளார். "ஒரு பிரிவு முழுவதுமாக வர்த்தக ரீதியாகவும் மற்றொன்று முழுமையாக சமூக, தேசிய மற்றும் ராஜதந்திர அம்சங்களை முன்னிட்டு செயல்பட வேண்டும்" என்று கூறியுள்ளார்.

ரயில்வே பட்ஜெட் தொடர்பாக மாநிலங்களவையில் இன்று நிகழ்ந்த விவாதத்தில் பங்காற்றிப் பேசிய திரு.பூஞ்ச், பொது பட்ஜெட்டிலிருந்து தனியாக பிரித்து, சமூக மற்றும் ராஜதந்திர ரீதியான ரயில்வே திட்டங்களுக்கு நிதி ஒதுக்க வேண்டும் என்று கூறினார்.

இந்திய-சீன நாடுகளின் எல்லைப்பகுதியின் கடைசி நுனிவரை, சீனா தனது ரயில்வே வலைப்பின்னலை நீட்டித்திருப்பதாக அவர் கூறினார். இந்தியாவின் எல்லைப் பகுதிகளிலோ இதுவரை ரயில் இணைப்பே இல்லை என்று கூறினார்.

இப்பகுதிகளில் போதிய ரயில் வசதி இல்லாததால் பொருளாதார நடவடிக்கைகள் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளன. அத்துடன் நாட்டின் அபிவிருத்தியால் பெறப்பட்ட பலன்கள் இப்பகுதியைச் சேர்ந்த மக்களைச் சென்று சேரவில்லை. அதனால்தான் அப்பகுதியில் வசிக்கும் மக்கள் நாட்டின் மையநீரோட்டத்திலிருந்து அவர்கள் அன்னியமாகி பிரிந்து விட நேர்கிறது. இந்தியாவுக்கும் சீனாவுக்கும் இடையில் போர் ஏற்படும் சூழ்நிலை ஏற்பட்டால், நமது ஆயுதப்படையினர் எல்லைப்பகுதிகளை எட்டுவதற்கு மிகுந்த நெருக்கடிகளை சந்திப்பர். ஆனால் சீன ராணுவ வீரர்களோ அந்நாட்டு அரசு ஏற்படுத்தும் ரயில் பாதைகள் மூலம் மிகுந்த பலன்களைப் பெறுவார்கள் என்பதில் சந்தேகமேயில்லை.

தற்போதைய ஐந்தாண்டு திட்டத்தின் கீழும், அடுத்த ஐந்தாண்டு திட்டத்திலும் இந்தியாவின் எல்லைப்புற பிராந்தியங்களையும் ரயில்வே

பாதைகள் மூலம் இணைப்பதற்குப் போதிய நிதி உதவியை மத்திய அரசு ஒதுக்க வேண்டும் என்று பூஞ்ச் கேட்டுக்கொண்டார்.

ரயில்வே பட்ஜெட் மூலம் அத்துறையை மீண்டும் சரியான தடத்திற்குக் கொண்டு வரும் வாய்ப்பு ஐக்கிய முற்போக்கு கூட்டணி அரசுக்கு கூடுதலாக கிடைத்ததாகவும் ஆனால் அது துரதிர்ஷ்டவசமாக தவறவிடப்பட்டதாகவும் திரு.பூஞ்ச் அவர்கள் தெரிவித்தார். கட் அண்ட் பேஸ்ட் பட்ஜெட் என்றும் ரயில்வே அமைச்சரின் பட்ஜெட் உரையை விமரிசித்தார். அத்துடன் ரயில்வே அமைச்சரின் உரையில் தொலைநோக்கே இல்லை என்றும், ரயில்வே துறையை மீண்டும் ஆரோக்கியமான நிலைக்குக் கொண்டுவருவதற்கான எந்த சுயமான யோசனைகளும் இல்லை என்றும் குறிப்பிட்டார்.

ஐக்கிய முற்போக்கு கூட்டணி அரசின் முந்தைய ஐந்தாண்டு ஆட்சியிலும், இந்த ஆட்சியிலும் மூன்று அம்சங்கள் பொதுவாக இருப்பதாகக் கூறினார்.

அந்த மூன்று அம்சங்களை விரிவான உதாரணங்களுடன் கூறிய திரு. பூஞ்ச், முதல் அம்சமாக அனைத்து ரயில்வே பட்ஜெட்களும் நிறைய வாக்குறுதிகளைக் கூறுவதாகத் தெரிவித்தார். இரண்டாவதாகப் புதிய பல திட்டங்களையும், பல அமைப்புகளையும் செயல்படுத்த இருப்பதாக அறிவிக்கும் என்றும் மூன்றாவதாக அடுத்து வரும் ரயில்வே அமைச்சர்கள், தங்கள் முந்தைய அமைச்சர்கள் உறுதிமொழி அளித்த எந்த திட்டங்களையும் குறித்து பேசவே மாட்டார்கள் என்றும் கூறினார். தற்போதைய ரயில்வே துறை அமைச்சர் தனக்கு முன்பு இருந்த ரயில்வே துறை அமைச்சர்கள் அறிவித்த ஐந்து திட்டங்களைத் தான் உருவாக்கியதாக உரிமை கோருவதாகவும் குற்றம்சாட்டினார்.

- இணையவழி பயணச்சீட்டு எடுப்பவர்களுக்குக் கூடுதல் கால நீட்டிப்புத் திட்டம் 2010 ஆண்டு ஜூன் மாதம் மம்தா பானர்ஜியால் அறிவிக்கப்பட்டது.
- மொபைல் போன்கள் வாயிலாக பயணச்சீட்டு எடுக்கும் திட்டம் லாலு பிரசாத் யாதவால் 2008-09 இல் அறிவிக்கப்பட்டது.
- முன்பதிவு தொடர்பான நிலையை உடனுக்குடன் அறிவிக்கும் எஸ்எம்எஸ் வசதியை 139 எண் மூலம் தெரிந்துகொள்ளும் திட்டத்தை 2009-10 இல் மம்தா பானர்ஜி அறிவித்தார்.

- புதிய தலைமுறை இ-டிக்கெட்டிங் முன்பதிவு திட்டம், 2012-13 இல் அப்போதைய ரயில்வே துறை அமைச்சராக இருந்த முகுல் ராயால் அறிவிக்கப்பட்டது.

பயணிகளுக்கான ரயில்களில் எலக்ட்ரானிக் தகவல் பலகைகள் அமைக்கும் திட்டம் 2008-09 இல் லாலு பிரசாத் யாதவ்வால் அறிவிக்கப்பட்டது.

பழுதானவைகளை மாற்றும் நிதியில் (டிஆர்எப்) பெரும்பகுதி குறைக்கப்பட்டிருப்பது ரயில்வே துறை சேவைகளைக் கடுமையாகப் பாதிக்கும் என்றும், பயணிகளின் பாதுகாப்புக்கும் ஊறு விளைவிக்கும் என்றும் பூஞ்ச் தெரிவித்தார்.

இதுபோன்ற நிதி ஒதுக்கீடுகள், பழைய பாலங்கள், ரயில் தடங்கள் மற்றும் காலாவதியான கருவிகளை மாற்றுவதற்குப் பயன்படுபவை. ரயில்வே சிக்னல்கள் மற்றும் தொடர்பு வலைப் பின்னல் வசதிக்காக ஒதுக்கப்படும் நிதியில் 953 கோடி ரூபாய் வெட்டப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார். ரயில் தண்டவாளங்களைப் புதுப்பிப்பதற்காக ஒதுக்கப்படும் தொகையில் 661 கோடி ரூபாய்கள் குறைக்கப்பட்டிருப்பதாகவும், பாலங்களைப் பழுதுபார்ப்பதற்காக ஒதுக்கப்படும் தொகையில் 124 கோடி ரூபாய் குறைக்கப்பட்டிருப்பதாகவும் விமரிசித்தார். ரயில்வே போக்குவரத்து வசதி மேம்பாட்டுக்கான தொகை 120 கோடி ரூபாய் குறைக்கப்பட்டுள்ளது. இந்தக் குறைப்புகள் அனைத்தும் ரயில்வே தொடர்பு வலைப்பின்னலின் பாதுகாப்பையும், பயணிகளின் பாதுகாப்பையும் பாதிக்கும் என்றார்.

அலகாபாத் ரயில் நிலையத்தில் கும்பமேளா பயணிகள் பரிதாபகரமாக இறந்துபோன சம்பவத்தைக் குறிப்பிட்ட அவர் அந்த மரணங்களுக்கு ரயில்வே துறைதான் பொறுப்பு என்றும், அவர்கள் விபத்தில் மரணம் அடையவில்லை என்றும் கொல்லப்பட்டவர்கள் என்றும் குறிப்பிட்டார்.

கும்பமேளாவுக்கு ரயில்வே துறை செய்த வசதிகளைப் பார்வையிட ரயில்வே துறை அமைச்சர் அலகாபாத்துக்குச் சென்றாரா? செல்லவில்லையெனில் அதற்குக் காரணம் என்ன? என்றும் பூஞ்ச் கேள்விகளை எழுப்பினார்.

ரயில்வே பட்ஜெட் தொடர்பாக பேசிய பூஞ்ச், சரக்குக் கட்டணத்தை 5.8 சதவீதம் ஏற்றியதற்கு கண்டனம் தெரிவித்தார். 2001 ஆம் ஆண்டிலிருந்து சரக்குக் கட்டணம் 450 முறை ஏற்றப்பட்டிருப்பதாகவும் கூறினார். 2001 இல் ரயில்வே துறையில், சரக்குகளின் போக்குவரத்து வருவாய் 60 சதவீதமாக இருந்ததாக அவர் குறிப்பிட்டார். தற்போது 30 சதவீதமாக குறைந்திருப்பதாகவும் குறிப்பிட்டார். சரக்குக் கட்டண ஏற்றம் பொருளாதாரத்தில் பாதிப்பை ஏற்படுத்தியிருக்கும் என்றார். அதனால் இரும்பு, நிலக்கரி, சிமெண்ட் மற்றும் உப்பு போன்ற பொருட்களின் விலைகள் கூடும் என்றும் தெரிவித்தார்.

இந்தியா விடுதலை அடைந்த காலத்தில் 53 ஆயிரம் கிலோமீட்டர் தூரத்துக்கு ரயில் தடங்களைக் கொண்டிருந்ததாக குறிப்பிட்ட பூஞ்ச், அதற்குப் பிறகு வெறும் 13 ஆயிரம் கிலோமீட்டர்களுக்கே புதிய தடங்கள் இணைக்கப்பட்டுள்ளதாக தெரிவித்தார். ஒரு ஆண்டுக்கு 200 கிலோமீட்டர் அளவுக்கு தடங்கள் கூடியிருக்கிறது. ஆனால் இதே காலகட்டத்தில் சீனாவில் போடப்பட்டிருக்கும் புதிய ரயில் தடங்களின் நீளம் 70 ஆயிரம் கிலோமீட்டர்களாகும் என்றும் அவர் கூறினார்.